Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror


www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 19, 2024

புதன்கிழமை ஜூன் 19, 2024 | ஒளி: 09 கதிர்: 276 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## ‘பாலின சமத்துவம்’ சட்டமூலம்:

# “தீர்ப்பை ஏற்க முடியாது”



பாலின சமத்துவ சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, பெண்களின் உரிமைகளுக்கும் பௌத்த மதத்தின் பாதுகாப்பிற்கும் சவாலாகவும் பிரச்சினைக்குரியதாகவும் அமையலாம் என்பதால் இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்க முடியாது. எனவே, அது குறித்து ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# “அரசியலமைப்புக்கு முரணானது”

### மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாமல் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்

‘பாலின சமத்துவம்’ சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது. எனவே, நீதிமன்றத்தின் திருத்தங்கள் இல்லாமல் நிறைவேற்றுவதானால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

‘பாலின சமத்துவம்’ சட்டமூலம் தொடர்பிலான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு செவ்வாய்க்கிழமை (18) அறிவித்தார்.

அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட ‘பாலின சமத்துவம்’ சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை சபைக்கு அறிவிக்கிறேன்.

தொடர்ச்சி P2

# ஜூலை 15இல் 2ஆம் திருத்தம்

2024இன் இரண்டாவது மின் கட்டண திருத்தம் ஜூலை 15ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ, செவ்வாய்க்கிழமை (18) தெரிவித்தார்.

உத்தேச மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் எழுத்துமூலமான கருத்துக்கள் ஜூலை 8ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் வாய்மூலமான கருத்துக்களை பெற்றுக்கொள்ளுதல் ஜூலை 9ஆம் திகதி நடைபெறும் எனவும் தலைவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2


# ஜனாஸாக்களை எரிக்க தீர்மானித்தவர் யார்?



முஸ்லிம் இனத்துக்கு மாத்திரம் எதிராக இனவாதமாக திட்டமிட்டு, செயற்படும் வகையில், கொரோனா தொற்றில் மரணித்தவர்களை எரிக்க வேண்டும் என தீர்மானம் மேற்கொண்டவர்கள் யார் என்பதை தேடிப்பார்த்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ச்சி P2

# தீர்ப்புக்கு ஜனாதிபதி சவால் விடுகின்றார்



நீதிமன்றத் தீர்ப்புக்கு சவால் விடும் வகையில் ஜனாதிபதி கருத்து வெளியிடுவது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) ஜனாதிபதியின் உரை தொடர்பில் தனது கருத்தை வெளியிட்டு உரையாற்றும் போதே ரதன தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# “கடற்றொழில் அமைச்சரே கண்ணை திறந்து பார்”

■ நிதர்ஷன் வினோத்




இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறும் இந்திய இழுவைப் படகைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக மீனவர்கள் போராட்டமொன்றை, செவ்வாய்க்கிழமை (19) முன்னெடுத்திருந்தனர்.

“இந்திய அரசே எமது கடல் வளத்தினை சூறையாடாதே”, “எம்மையும் வாழவிடுங்கள்” என கோரி யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# வேலையில்லா பட்டதாரிகள்...



தங்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புகளை வழங்கவேண்டுமெனக் கோரி, வேலையில்லா பட்டதாரிகள், பாராளுமன்றத்திற்கு அருகில் செவ்வாய்க்கிழமை (18) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

# ஆதரவான எதிர்க்கட்சி எம்.பிகளுக்கு இலஞ்சம்



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்படும் எதிர்க்கட்சியினருக்கு மாத்திரம் வழங்குவதானது இலஞ்சம் வழங்குவதற்குச் சமமானது என்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “உயர்நீதிமன்றை மூடி விடலாம்”



ஜனாதிபதி தந்திரமான முறையில் நீதிமன்றத்திற்கே சவால் விடும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார் என்ற குற்றஞ்சாட்டிய விமல் வீரவன்ச, உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கே சவால் விட முடியுமென்றால் அவ்வாறான உயர்நீதிமன்றம் இருப்பதில் பலனில்லை என்றும், அவற்றை மூடிவிடலாம் என்றார்.

தொடர்ச்சி P2

# “ஜனாஸாக்களை எரித்த பாவத்தின் பங்காளி ரணில்”



கொரோனா பெருந்தொற்றுத் தாக்கத்தில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தகனம் செய்த கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் பாவத்தின் பங்காளியாக தற்போதைய ஜனாதிபதி

தொடர்ச்சி P2

# “7 வருடங்களில் 42 பேருக்கு தூக்கு”



1969ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை 42 பேர் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 1976 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோரினார் ஜனாதிபதி

கொரோனா காலப்பகுதியில் உடல்களைத் தகனம் செய்ததன் மூலம் முஸ்லிம் மக்களுக்கு பாரியளவில் மனம் புண்படும் நிலைமை ஏற்பட்டமை தொடர்பில் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொரோனாவினால மரணித்தோரின் உடல்கள் தகனம் செய்யப்பட்டமை தொடர்பில், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற வாதப் பிரதிவாதத்தின் போதே இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

இந்த நாட்டில் யாருக்கு வேண்டுமானாலும் தங்களது உடலை அடக்க வேண்டுமா தகனம் வேண்டுமா என்பது தொடர்பில் தீர்மானிக்கும் உரிமை இருக்க வேண்டும். அதனால் மரணித்த நபர் ஒருவரின் சடலத்தை நல்லடக்கம் செய்தல், தகனம் செய்தல் அல்லது சடலத்தை வைத்திய பீடத்துக்கு வழங்குதல் தொடர்பான உரிமையை வழங்குதல் தொடர்பில் சட்டம் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் கொண்டுவரப்படவுள்ளது.

கொரோனா காலப்பகுதியில் உடல்களைத் தகனம் செய்ததன் மூலம் பிரதானமாக முஸ்லிம் மக்களுக்கு பாரியளவில் மனம் புண்படும் நிலைமை ஏற்பட்டது.

என்றாலும் மரணத்திற்குப் பின்னர் நல்லடக்கம் செய்வதற்கு விருப்பமான இந்து. பௌத்த மற்றும் கிறிஸ்தவ மக்களும் இருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட விடயம் தொடர்பில் நாங்கள் அவர்களிடம் மன்னிப்பு கோருகிறோம். அதேபோன்று இது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்துக்கு இந்த சபையில் அனைவரும் ஆதரவளிப்பார்கள் என நான் நம்புகின்றேன் என்றார்.

# தடைக்காலம் முடிந்த பின்னர் நால்வர் கைது



நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் நான்கு பேரை இலங்கை கடற்படை திங்கட்கிழமை (17) கைது செய்துள்ளது. மீனவர்களை படகுகளுடன் சிறை பிடித்து இலங்கை கடற்படை முகாமில் வைத்து விசாரணை நடத்தி வருகிறது.

தொடர்ச்சி P2

## ‘பாலின சமத்துவம்’ சட்டமூலம்:

# “தீர்ப்பை ஏற்க முடியாது”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) பாலின சமத்துவச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்த பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறுகையில்,

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியலமைப்பின் 4 ஆவது சரத்தின் கீழ் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மீறுகிறது. அத்துடன் பாலின சமத்துவ சட்டமூலமானது எந்த தேசிய கொள்கையைக் குறிக்கிறது என நீதிமன்றங்கள் கேள்வி எழுப்புகின்றன. இது 2011 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரம் பற்றிய தேசியக் கொள்கையைக் குறிக்கிறது. அத்துடன் பெண்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச மரபுகளைக் கடைப்பிடிப்பது அனைத்து அரசாங்கங்களின் கடமை . இது இலங்கை நடைமுறைப்படுத்த இணங்கிய நிலையான அபிவிருத்திக் கொள்கைகளுக்கும் இணங்குவதாகவும் உள்ளது

பாலின சமத்துவச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. பத்து நீதிபதிகள் கொண்டு வழங்கிய தீர்ப்பு உட்பட சில தீர்ப்புகளை அது புறக்கணித்துள்ளது. குற்றவியல் சட்டத்தில் பிரதம நீதியரசர் செய்த திருத்தத்தையும் நீதிமன்றம் புறக்கணித்துள்ளது. இந்தத் தீர்ப்பு வழங்கப்பட முன்னர் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை

இந்த சட்டமூலத்தில் பாலின சமத்துவம் பற்றிக் குறிப்பிடும்போது 2011 ஆம் ஆண்டு முதல் பெண்களைப் பலப்படுத்தும் சட்டம் நடைமுறையில் உள்ளது. அது சம்பந்தமாக அனைத்து மரபுகளையும் நாங்கள் அறிந்துள்ளோம். இது தொடர்பில் கமலாவதி குழு, சரத் ஜயசிங்க குழு முன்னிலையில் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், ஷிராணி பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்பில் அநீதி, பாகுபாடுகளை இல்லாதொழித்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன என்பதை நான் இந்த நேரத்தில் கூற விரும்புகின்றேன். அதன்படி, பெண்களுக்கான சமத்துவத்தை உருவாக்கத் தண்டனைச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தோம். ஆனால், உயர் நீதிமன்றத்தால் இந்த சட்டமூலம் தொடர்பான விடயத்தில் அந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை

முன்னைய தீர்ப்புகளை ஆராயாமல் எப்படித் தீர்ப்பு வழங்க முடியும்? சட்ட வரைவுப் பிரிவு வழங்கிய உண்மைகளின் அடிப்படையில் இத்தகைய முடிவை எடுக்கக்கூடாது. உயர் 1972 அரசியலமைப்பை ஆராய வேண்டும். சட்டமூலமொன்றை கொண்டுவரும்போது அது தொடர்பில் ஆலோசனை வழங்கும் பொறுப்பு உயர் நீதிமன்றத்துக்கு இருக்கிறது. அதற்கு அப்பால், உயர் நீதிமன்றத்தால் தற்போதுள்ள விதிகள் மற்றும் விதிமுறைகளை மீற முடியாது. உயர் நீதிமன்றத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நான் உடன்படுகிறேன். இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்க முடியாது.

இந்த தீர்ப்பானது பிரிவெனா கல்வி சட்டமூலத்திற்கும் சவால் விடுகிறது. பாலின சமத்துவச் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, பெண்களின் உரிமைகளுக்கும் பௌத்த மதத்தின் பாதுகாப்பிற்கும் சவாலாகவும் பிரச்சினைக்குரியதாகவும் அமையலாம் என்பதால் அது குறித்து ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்

இதற்காக நீதிபதிகளைப் பாராளுமன்றத்திற்கு அழைக்க வேண்டும் என நான் முன்மொழியவில்லை, ஆனால் பாராளுமன்ற மகளிர் குழுவில் இருந்து பெரும்பான்மையான உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன் என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியா ன எம்.ஏ.சுமந்திரன், சட்டமூலத்தை மீள் நிர்ணயம் செய்வதற்கு மேல் நீதிமன்றத்திற்கு அனுப்புவதே சிறந்தது. “உச்சநீதிமன்றத்தைச் சவாலுக்கு உட்படுத்துவதை விடவும் தீர்ப்பை மறு பரிசீலனைக்குப் பரிந்துரைப்பது நல்லது. உயர் நீதிமன்றம் வழங்கிய ஒவ்வொரு தீர்மானத்தையும் ஆராய தெரிவுக் குழுக்களை நியமிப்பது ஆரோக்கியமான நடவடிக்கையல்ல” என்றார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, நான் உயர் நீதிமன்றத்திற்குச் சவால் விடவில்லை . மக்களின் இறைமை தொடர்பில் ஒரு விடயத்தை மட்டுமே முன்வைத்தேன். மக்களின் இறையாண்மை பாராளுமன்றத்தில் உள்ளது. இந்தக் கருத்தைத்தான் நான் எழுப்பினேன்” என்றார்.

# “அரசியலமைப்புக்கு முரணானது”

சட்டமூலத்தின் ஒருசில உறுப்புரைகள் அரசியலமைப்பின் 12ஆவது பிரிவுக்கு முரணானது. மேலும் அவை சட்டமூலத்தின் பிற விதிகளிலிருந்து பிரிக்க முடியாதவை. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த சட்டமூலத்தை முழுமையாக ஒட்டுமொத்தமாகச் சட்டமாக்க முடியாது.

அவ்வாறு நிறைவேற்றுவதானால் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாமல் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் மற்றும் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை முழுமையாக நிறைவேற்றாமல் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது. உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள திருத்தங்களை நிறைவேற்றாமல் சட்டமூலத்தை நிறைவேற்றுவதானால் பெரும்பான்மை ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளது என்றார்.

# ஜூலை 15 இல் 2ஆம் திருத்தம்

இந்த கட்டண திருத்தத்தில் மின் கட்டணம் குறைக்கப்பட உள்ளது. அதன்படி, குறைக்கப்பட்ட சதவீதங்கள் ஜூலை 15ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றார்.

# ஜனாஸாக்களை எரிக்க தீர்மானித்தவர் யார்?

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையில், கொரோனா தொற்றில் மரணித்தவர்களின் சடலங்களை எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் போன்று எதிர்காலத்தில் அவ்வாறான பிழையான தீர்மானங்களை தவிர்க்கும் வகையில் புதிய சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த கருத்து தொடர்பிலேயே இவ்வாறு வேண்டுகோள் அவர் மேலும் தெரிவிக்கையில்கொ

கொரோனா தொற்றில் மரணிப்போரின் சடலங்களை எரிக்க வேண்டும் என அப்போது இருந்த அரசாங்கம் விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமித்து எடுத்த நடவடிக்கை, அரசியல் வரலாற்றில் முஸ்லிம் இனத்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட மிகவும் மோசமான இனவாத செயற்பாடாகும். கொரோனா தொற்றில் மரணிப்போரின் சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்த நிலையில் அரசாங்கம் எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் மிகவும் கீழ்த்தரமான செயல்.

எமது நாட்டின் முஸ்லிம் மக்களின் உரிமையை மீறி இவ்வாறு சடலங்களை எரிக்க எடுத்த தீர்மானம் அடிப்படை உரிமையை மீறும் செயல். இது ஒரு இனத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. அதனால் நாட்டில் முஸ்லிம் இனத்துக்கு மாத்திரம் எதிராக திட்டமிட்டு, இனவாதமாக செயற்படும் வகையில், கொரோனா தொற்றில் மரணித்தவர்களை எரிக்க வேண்டும் என தீர்மானம் மேற்கொண்டவர்கள் யார் என்பதை தேடிப்பார்த்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## “உயர்நீதிமன்றை மூடி விடலாம்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) ஜனாதிபதியின் உரை தொடர்பில் தனது கருத்தை வெளியிட்டு உரையாற்றும் போதே வீரவன்ச இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

ஜனாதிபதி மிகவும் சூட்சுமமான முறையில் பந்து வீசுகின்றார். இதில் முதலாவது பந்து வீச்சாகப் பெண்களை வலுப்படுத்தும் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் கருத்து உள்ளது. சூட்சும ஞானம் இருப்பதால் இதற்குத் தந்திரம் என்று கூறலாம்.

அடுத்ததாக கொவிட் காலத்தில் முஸ்லிம்களின் இறந்த உடலைப் புதைப்பது தொடர்பான சர்ச்சை விடயத்தை இரண்டாவது பந்தாக வீசினார்.

அத்துடன், வாடகை வீடுகள் வரி தொடர்பான விடயத்தை மூன்றாவது பந்தாக வீசினார். இதில் முதலாவது பந்தான நீதிமன்றத்திற்குச் சவால் விடுவது உள்ளது. தந்திரமாகவே மற்றைய பந்துகளை வீசியுள்ளார்.

இதேவேளை, பெண்கள் வலுப்படுத்தல் தொடர்பான விடயத்தில் பாலின மாற்றத்திற்கு அனுமதி வழங்கும் வகையில் சட்டங்கள் வருவது சிக்கலுக்குரியது. உயிரியல் ரீதியிலான பெண்களைப் பலப்படுத்துவது சரியானது. ஆனால் அந்தப் போர்வையில் பாலின மாற்ற வியாபாரத்திற்கு இடமளிப்பதை அனுமதிக்க முடியாது. உயர் நீதிமன்றத் தீர்மானத்திற்குச் சவால் விடுவது தவறானதே.

அத்துடன் வரிக்கு மேல் வரி அறவிடுவது தவறுதான். என்றாலும் நீதிமன்றத்திற்குச் சவால் விடுவது மிகவும் பாரதூரமானதே. அப்படியென்றால் உயர்நீதிமன்றத்தை மூடிவிடுங்கள். அவ்வாறான உயர்நீதிமன்றத்தை வைத்திருப்பதில் பலனில்லை என்றார்.

# தீர்ப்புக்கு ஜனாதிபதி சவால் விடுகின்றார்

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

உயர்நீதிமன்றத்தினால் பெண்கள் உரிமைகள் தொடர்பில் வழங்கிய தீர்ப்பு குறித்துத் தான் மகிழ்ச்சியடையவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார். ஜனாதிபதி தனி நபராக பாராளுமன்றத்திற்கு வந்தாலும் அவர் கூறுவது யாருடைய நிலைப்பாடு.

அரசாங்கத்தின் நிலைப்பாடா? அல்லது நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் அவரின் நிலைப்பாடா? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் ஏதாவது தவறுகள் இருந்தால் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகளை அழைத்து நியாயமான விடயங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பில் கருத்தைக் கூறி, அங்கு எடுக்கப்பட்ட கூட்டுத் தீர்மானத்திற்கமைய பாராளுமன்றத்தில் கூறியிருக்கலாம்.

பாலின உரிமைகள் தொடர்பில் உலகில் ஒவ்வொரு வகையில் உள்ளது. பௌத்த நாடென்ற வகையில் பாலினம் சம உரிமைகள் தொடர்பில் ஏற்றுக்கொண்டுள்ளோம். எனினும் எமது நாட்டில் பாலினம் தொடர்பில் மேற்குலக உள்ளதைப் போன்று வேறு நிலைப்பாடுகளில் இல்லை. இந்நிலையில் ஜனாதிபதி நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தொடர்பில் விமர்சனம் செய்வது சிக்கலுக்குரியது.

இது போன்று வேறு விடயங்களில் தனி நபர் என்ற ரீதியில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமா? இல்லையா? என்ற விடயத்திலும், பாராளுமன்ற பதவிக் காலத்தை நீடிக்கும் விடயத்திலும் இவ்வாறு ஜனாதிபதி கதைக்கப்போனால் தவறான முன்மாதிரியாகவே அமையும் என்றார்.

# ஆதரவான எதிர்க்கட்சி எம்.பிகளுக்கு இலஞ்சம்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) பன்முகப்படுத்தப்பட்ட நிதி தொடர்பில் சுயாதீன எதிரணி பாராளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகரவினால் முன்வைக்கப்பட்ட கூற்றைத் தொடர்ந்து தனது கருத்தை முன்வைத்து உரையாற்றுகையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறினார்.

முதலில் கருத்து தெரிவித்த தயாசிறி ஜயசேகர கூறுகையில்,

பன்முகப்படுத்தப்பட்ட நிதி கடந்த காலங்களாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படாது இருக்கின்றது. இது தொடர்பில் அடிக்கடி சுட்டிக்காட்டியுள்ளோம். ஆனால் இப்போது பட்டியலொன்று வந்துள்ளது. அதில் சில எம்.பிக்களுக்கு 100 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது பைசல் காசீம், ஹாரீஸ், இசாத் ரஹுமான் மற்றும் அலி சஹீர் மௌலானா அகியோருக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ரிஷாட் பதியூதினுக்கு 84 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏன் இப்படிக் கவனிப்பு வழங்கப்படுகின்றன என தெரியவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் ஏன் வழங்கப்படுகின்றது?

இதனை வழங்குவதென்றால் எல்லோருக்கும் வழங்க வேண்டும். நாங்களும் வாக்குகளிலேயே வந்துள்ளோம். நாங்களும் மக்களுக்காக வேலை செய்ய வேண்டும். அரசாங்கத்திற்காகக் கடைக்குப் போனால்தான் இதனை வழங்குவீர்களா? இதனை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று கூறுகின்றேன் என்றார்.

# “கடற்றொழில் அமைச்சரே கண்ணை திறந்துபார்”

யாழ்ப்பாணம். சென் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் உள்ள மருதடிச் சந்தியில் இருந்து துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்று தூதரகம் முன்பாக கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“ இலங்கை கடற்படையே நிறுத்து நிறுத்து”, “அத்துமீறலைத் தடுத்து நிறுத்து”, “கடற்தொழில் அமைச்சர் கண்ணைத் திறந்துபார்”, “இந்திய அரசே எம்மையும் வாழ விடு”, “சிறிலங்கா காவல்துறையே எங்களைத் தடுக்காதே” உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து தங்களது கோரிக்கொள் அடங்கிய மகஜரொன்றை மீனவர் சங்கப் பிரதிகள், துணைத் தூதரகத்தில் கையளித்தனர்

# தடைக்காலம் முடிந்த பின்னர் நால்வர் கைது

மேலும், கைதான மீனவர்கள் 4 பேரும் இராமநாதபுரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்றவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடைக்காலம் முடிந்த பின்னர் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## “7 வருடங்களில் 42 பேருக்கு தூக்கு”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் புத்திக பத்திரன எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்

1959ஆம் ஆண்டிலிருந்து 1975ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கண்டி போகம்பரை சிறைச்சாலையில் 31 நபர்களுக்குத் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை தகவல்களின்படி 1969ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை 42 பேர் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.அந்த வகையில் 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்படவில்லை. மரண தண்டனை விதிக்கப்படாததால் நாட்டில் 46 வருட காலங்கள் எவரும் மரண சான்றிதழ் தொடர்பான பரிசோதனை தொடர்பில் விண்ணப்பங்களை முன்வைக்கவில்லை என்றார்.

மரண தண்டனை நடைமுறைப்படுத்தும் போது அது மருத்துவர் ஒருவரின் முன்னிலையிலேயே இடம் பெறுகிறது.

அந்த வகையில், மரண தண்டனை வழங்கப்பட்டு அவர் மரணமடைந்தார் என்ற அறிக்கையை சம்பந்தப்பட்ட மருத்துவர் வழங்கும்போது அதன் மூலமே மரண சான்றிதழ் தயாரிக்கப்படுகிறது என்றார்.

# “ஜனாஸாக்களை எரித்த பாவத்தின் பங்காளி ரணில்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) ஜனாதிபதியின் உரை தொடர்பில் தனது கருத்தை வெளியிட்டு உரையாற்றும் போதே வீரவன்ச இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி மிகவும் சூட்சுமமான முறையில் பந்து வீசுகின்றார். இதில் முதலாவது பந்து வீச்சாகப் பெண்களை வலுப்படுத்தும் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தைச் சவாலுக்கு உட்படுத்தும் வகையில்

**“ வரிக்கு மேல் வரி அறவிடுவது தவறுதான். என்றாலும் நீதிமன்றத்திற்குச் சவால் விடுவது மிகவும் பாரதூரமானதே. அப்படியென்றால் உயர்நீதிமன்றத்தை மூடிவிடுங்கள். அவ்வாறான உயர்நீதிமன்றத்தை வைத்திருப்பதில் பலனில்லை**

ஜனாதிபதியின் கருத்து உள்ளது. சூட்சும ஞானம் இருப்பதால் இதற்குத் தந்திரம் என்று கூறலாம்.

அடுத்ததாக கொவிட் காலத்தில் முஸ்லிம்களின் இறந்த உடலைப் புதைப்பது தொடர்பான சர்ச்சை விடயத்தை இரண்டாவது பந்தாக வீசினார்.

அத்துடன், வாடகை வீடுகள் வரி தொடர்பான விடயத்தை மூன்றாவது பந்தாக வீசினார். இதில் முதலாவது பந்தான நீதிமன்றத்திற்குச் சவால் விடுவது உள்ளது. தந்திரமாகவே மற்றைய பந்துகளை வீசியுள்ளார்.

இதேவேளை, பெண்கள் வலுப்படுத்தல் தொடர்பான விடயத்தில் பாலின மாற்றத்திற்கு அனுமதி வழங்கும் வகையில் சட்டங்கள் வருவது சிக்கலுக்குரியது. உயிரியல் ரீதியிலான பெண்களைப் பலப்படுத்துவது சரியானது.

ஆனால், அந்தப் போர்வையில் பாலின மாற்ற வியாபாரத்திற்கு இடமளிப்பதை அனுமதிக்க முடியாது. உயர் நீதிமன்றத் தீர்மானத்திற்குச் சவால் விடுவது தவறானதே.

அத்துடன் வரிக்கு மேல் வரி அறவிடுவது தவறுதான். என்றாலும் நீதிமன்றத்திற்குச் சவால் விடுவது மிகவும் பாரதூரமானதே. அப்படியென்றால் உயர்நீதிமன்றத்தை மூடிவிடுங்கள். அவ்வாறான உயர்நீதிமன்றத்தை வைத்திருப்பதில் பலனில்லை என்றார்.



# அகில இலங்கை கம்பன் விழா–2024 இறுதி நாள்

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழா-2024 இறுதி நாள் வெள்ளவத்தை இராமகிருஷ்ணா மிஷன் மண்டபத்தில் திங்கட்கிழமை (17) மாலை நடைப்பெற்றது.

இதில், தமிழ்நாடு சரஸ்வதி சம்மான் விருதாளர் எழுத்தாளர் 'சிவசங்கரிக்கு' கம்பன் புகழ் விருதினை அமரர் வி.ரி.வி.தெய்வநாயகம் பிள்ளை நினைவு அறக்கட்டளையின் சார்பாக குடும்ப அங்கத்தவர்கள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில், வைத்தியர். சண்முகம் ஸ்ரீதரன் 'கம்பகலாநிதி' விருதையும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் பேராசிரியர் 'அ.ச.ஞானசம்பந்தன்' விருதையும், வடமாகாண பிரதம செயலாளர் லச்சுமணன் இளங்கோவன் 'கம்பவாணர் அருகிணி' விருதினையும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய 'வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை' விருதையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கிம் 'கம்பன் அடிப்பொடி சா.கணேசன்' விருதையும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் 'மாகாவித்துவான் சி.கனேசையர்' விருதையும் பெற்றுக்கொண்டனர்.











# ஜனாதிபதி தயாரா?

தமிழ் மக்கள் இந்த நாட்டினுடைய அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் பங்கெடுத்து உலக வல்லரசு தரத்திற்கு இந்த தேசத்தைக் கொண்டு வருவதற்காகச் சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தயாரா என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) பெண்களின் சமத்துவம் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் அறிவித்த வியாக்கியானம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்து தொடர்பிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் கஜேந்திரன் எம்.பி. பேசுகையில்,

இன்றைய காலகட்டத்தில் இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கப் பல முயற்சிகளை அவர் செய்து வருவதாகத் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்.

இந்த நாட்டை பொருளாதார அழிவிலிருந்து மீட்டெடுக்கச் செய்ய வேண்டிய மிகப்பிரதானமான கடமை அவருக்கு இருக்கின்றது என்பதனை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன் .

இனங்களுக்கிடையில் 75 வருடங்களுக்கு மேலாக இருந்த உறவைச் சீர்குலைத்துத் துருவ மயப்படுத்தியுள்ள ஒற்றையாட்சி முறையே இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த நாட்டினுடைய உயர் நீதிமன்றம் உட்பட அனைத்து நீதிமன்றங்களையும் முடமாக்கியுள்ள ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட்டு தமிழ் தேசமும் சிங்கள தேசமும் சமத்துவமாக இந்த நாட்டினுடைய



முன்னேற்றத்தில் பங்கெடுக்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசியலமைப்பு கொண்டுவரப்படுவதன் மூலம் மட்டும்தான் இந்த தேசத்தில் முன்னேற்றத்தை நிரந்தரமாக ஏற்படுத்த முடியும்.

அவ்வாறான ஒரு முயற்சியைச் செய்வதற்கு ஜனாதிபதி தன்னுடைய காலத்தில் இந்த ஒற்றையாட்சி முறையை ஒழித்து தோல்விகளை எல்லாம் ஒப்புக்கொண்டு, அதனை ஜனாதிபதியின் தோல்வி என நான் சொல்லவில்லை. ஒற்றையாட்சி முறையின் தோல்வியை ஒப்புக்கொண்டு தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கும் அதன் மூலம் தமிழ் மக்கள் இந்த நாட்டினுடைய அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் பங்கெடுத்து உலக வல்லரசு தரத்திற்கு இந்த தேசத்தைக் கொண்டு வருவதற்கான சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் அதற்கு அவர் தயாரா என கேள்வி எழுப்புகின்றேன் என்றார்.

கஜேந்திரன் எம்.பியின் உரையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேட்டுக்கொண்டிருந்தபோதும் எந்தப்பதிலையும் வாங்கவில்லை என்றார்.

# வீதியை புனரமைத்து தருமாறு ஆர்ப்பாட்டம்




■ பி.கேதீஸ்

தலவாக்கலை-டயகம பிரதான வீதி பாரியளவில் சேதமடைந்துள்ளதாகவும், பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்களைச் செலுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்து தலவாக்கலை-டயகம பிரதான வீதியில் சேவையில் ஈடுபட்டுவரும் அனைத்து தனியார் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் செவ்வாய்க்கிழமை (18) நாகசேனை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக டயகம - தலவாக்கலை, தலவாக்கலை - எல்ஜின் மற்றும் தலவாக்கலை - இராணிவத்தை ஆகிய இடங்களுக்கு இவ்வீதி வழியாகப் பயணிக்கும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்களும் சாரதிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லிந்துலை நகரிலிருந்து டயகம வரையிலான 21 கிலோ மீற்றர் தூரம் மிகவும் சேதமடைந்துள்ளதாகவும் மக்கள் நடந்து கூட செல்ல முடியாத நிலையில் இந்த வீதி காணப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பேருந்து சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு அப்போதைய அரசு இந்த வீதியை கார்பெட் இட்டுப் புனரமைப்பு செய்வதாகக் கூறி வீதியின் இருபுறமும் பல கிலோ மீட்டர் தூரம் அகலப்படுத்தியதாக மக்கள் கூறுகின்றனர்.

டயகம, அக்கரபத்தனை, போபத்தலாவ, மெனிக்பாலம், மன்ராசி, ஹோல்புருக், திஸ்பனை, மெரயா, எல்ஜின், இராணிவத்தை போன்ற பல தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் நாள்தோறும் தலவாக்கலை டயகம வீதியைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதி சேதமடைந்து காணப்படுவதனால் பாடசாலை மாணவர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள், ஏனைய பயணிகள் உள்ளிட்டோர் கடும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே, இவ்வீதியை உடனடியாக புனரமைத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாரதிகள் கோரிக்கை விடுத்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, நேற்றைய தினம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.



# அரச அதிகாரிக்கு எதிராக களத்தில் குதித்தார் ஜீவன்

■ ஆ.ரமேஸ்

நோர்வூட்- நியூவெளி தோட்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒதுக்கிய நிலத்தை முறைகேடாகக் கைப்பற்ற முயன்ற அரச அதிகாரிக்கு எதிராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நோர்வூட்- நியூவெளி தோட்ட தொழிற்சாலை பிரிவிற்கு செவ்வாய்க்கிழமை (18) காலை திடீர் விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

நோர்வூட்-நியூவெளி தோட்ட தொழிற்சாலை பிரிவில் கடந்த 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தினால் பத்து குடும்பத்தினர் தங்களது வீடுகளை இழந்து தற்காலிக இடத்தில் வசித்து வந்தனர்.

இவ்வாறு வீடுகளை இழந்த பத்து குடும்பங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் நிதியினை கொண்டு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இவ்வீடுகளை அமைத்துக் கொடுக்க ஒதுக்கப்பட்ட காணியை இப் பிரதேசத்தைச் சார்ந்த அரச அதிகாரி ஒருவர் முறைகேடாக ஆக்கிரமித்துள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கு தோட்ட மக்கள் கொண்டு வந்திருந்தனர்.

இது தொடர்பாகக் கவனம் செலுத்திய அமைச்சருக்கு தோட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தான் பணி புரியும் ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி, வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள மக்களை மிரட்டி இடத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் அந்த அரச அதிகாரி ஈட்டுப்பட்டுள்ளார் என்ற விடயம் தெரியவந்துள்ளது.

பிரதேச பொதுமக்கள் வழங்கிய புகாரை ஏற்று நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்த காணியானது காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்குச் சொந்தமான காணி என்பதை உறுதி செய்தார்.

அத்துடன், இக்காணியைத் தோட்ட நிர்வாகம் முறையாகப் பெற்றுக்கொண்டுள்ளது என்பதையும் உறுதி செய்து வீடுகளை நிர்மாணிக்கும் பணியை உடன் ஆரம்பிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த விஜயத்தில் அமைச்சருடன் நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ரவி குழந்தைவேல், இ.தொ.கா தேசிய அமைப்பாளர் திரு சக்திவேல், காணி சீர்திருத்த ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சரின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

# கசிப்பு காய்ச்சியவர் கைது

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா - ஸ்ரஸ்பி தோட்டம்- எனண்டல் பிரிவில் சட்ட விரோதமாக முறையில் கசிப்பு உற்பத்தி செய்து வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலுக்கமைய, திங்கட்கிழமை (17) இரவு அப்பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸார்,கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யபட்டவரிடம் பல கோணங்களில் விசாரணை நடத்தி வருவதுடன், ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# பட்டதாரிகளின் மீது நீர்த்தாரை பிரயோகம்

வேலையில்லா பட்டதாரிகளால் பாராளுமன்றத்திற்கு அருகில் செவ்வாய்க்கிழமை(19) முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகங்கள் நடத்தப்பட்டது.

இதனால் பாராளுமன்றம் செல்லும் வீதியில் பொல்துவ சுற்று வட்டப் பகுதியில் செவ்வாய்க்கிழமை(18) பிற்பகல் பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

வேலையில்லா பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென வலியுறுத்தி ஒன்றிணைந்த வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த நிலையில், அவர்கள் அவ்விடத்தில் இருந்து பாராளுமன்றம் பக்கமாகச் செல்ல முடியாதவகையில் பொலிஸார் பாராளுமன்ற வீதியில் தடுப்பு






வேலிகளைப் போட்டிருந்ததுடன், அந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து அகன்று செல்லுமாறு பொலிஸார் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தல்களை விடுத்த போதும், ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்விடத்திலேயே தொடர்ந்தும் இருந்தமையினால் பொலிஸார் நீரை பீய்ச்சியடிக்கும் வாகனங்கள் மூலம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை தாக்குதல்களை நடத்தி அவர்களை அங்கிருந்து விரட்ட முயன்றனர்.

எனினும், தொடர்ந்தும் அவர்கள் அங்கேயே நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையினால் அவர்களை நோக்கி கண்ணீர்புகை பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலைமை ஏற்பட்டதுடன், வாகன போக்குவரத்துகளும் பாதிப்படைந்திருந்தன.

# கொரோனா ஜனாஸாக்கள் எரிப்பும் காலம் கடந்த ஞானமும்

கொரோனா காலத்தில், உலகளாவிய ரீதியில் மக்கள் முகங்கொடுத்த துன்பங்கள் ஏராளம். பொருளாதார பாதிப்பினால் இன்னும் மீண்டெழ முடியாத நிலைமையே ஒருசில நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளன. கொரோனா தொற்றுக்கு உள்ளாகிய பலரும் இறந்துவிட்டனர். இன்னும் சிலர் மீண்டுவிட்டனர். நமது நாட்டை பொறுத்தவரையில், எடுக்கப்பட்ட ஒருசில தீர்மானங்கள் மனங்களை இன்னும் நெருடிக் கொண்டுதான் இருக்கின்றது.

அரசியல்வாதிகள், ஆட்சியாளர்களால் மட்டுமன்றி அரச இயந்திரத்தாலும் ஒரு காலத்தில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி எடுக்கப்படுகின்ற தீர்மானத்தை பின்னொரு நாளில் அவர்களே 'தவறு' என ஒப்புக் கொள்வது நமக்குப் புதிதல்ல. பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டமைக்காக முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

இது வழக்கமானதும் நமக்குப் பழகிப் போனதும் என்றால் கூட, எல்லாத் தவறுகளையும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது என்பதுதான் இங்கு முக்கியமானது. அதாவது, ஒட்டுமொத்த நாட்டு மக்களை அல்லது ஒரு சமூகப் பிரிவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற வன்மத்தனமான, முட்டாள்தனமான முடிவுகளே அன்றைய காலகட்டத்தில் எடுக்கப்பட்டன.

கொரோனாவினால் மரணமடைவோரைப் புதைக்கலாம் என்றொரு நியதி இருந்தது. உலக சுகாதார அமைப்பின் பரிந்துரையாகவும் இருந்தது. ஆனால், நமது நாட்டில் மட்டும், சடலங்கள் எரிக்கப்பட்டன. அதில், பிஞ்சு குழந்தைகளின் சடலங்கள் உட்பட வயதானவர்களின் சடலங்களும் வெந்து தணிந்தன.

ஒவ்வொருவரும் தங்களுடைய இன, மத, கலாசாரத்தைக் கட்டாயமாகப் பின்பற்றியே தீருவார்கள். மரணத்தின் போதும் அவற்றை அச்சொட்டாகக் கடைப்பிடிப்பார்கள், செய்யவேண்டிய இறுதி கிரிகைகளைச் செய்வார்கள் எனினும், கொரோனாவில் மரணித்தவர்களுக்கு எவ்விதமான இறுதி கிரியைகளும் செய்யப்படவில்லை. முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரியூட்டப்பட்டன.

அதற்குப் பல தரப்புகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பிய போதிலும், எதற்கும் செவிசாய்க்காது, ஜனாஸாக்களை எரியூட்டினர். கொரோனா சடலங்களை எரியூட்டியே அழிக்கவேண்டுமென எவ்விதமான நிபந்தனைகளும், பரிந்துரைகளும் விதிக்கப்படாத நிலையில், எரியூட்டப்பட்டன. தற்போதும், ஆளுக்கு ஆள் விரல்களை நீட்டி குற்றஞ் சுமத்துகின்றனர்.

இந்நிலையில்தான், கொரோனா காலப்பகுதியில் உடல்களைத் தகனம் செய்ததன் மூலம் முஸ்லிம் மக்களுக்கு பாரியளவில் மனம் புண்படும் நிலைமை ஏற்பட்டமை தொடர்பில் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னிப்புகூட, ஜனாஸாக்கள் எரியூட்டப்பட்டதற்காகக் கேட்கவில்லை. மற்றுமொரு சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான ஆதரவைத் திரட்டிக்கொள்ளவே கேட்கப்பட்டுள்ளது. இல்லையேல், தான், ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், பகிரங்கமாக மன்னிப்பு கேட்டிருக்கலாம்.

ஆனால், ஒவ்வோர் அரசியல் நகர்வுக்குப் பின்னாலும் அரசியல் இருப்பதைப் போல. இந்த மன்னிப்புக்குப் பின்னாலும் அரசியல் உள்ளது என்பதே எமது அவதானிப்பாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

திருமணத்துக்கு முன்னர், ஆண், பெண் இருசாராரும் தங்களது திருமண வாழ்வு, எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்வார்கள். அதன்படி வாழ்ந்தே தீரவேண்டும் என்று உறுதி பூணுவார்கள்.

ஆனால், எல்லோரது வாழ்க்கையும் நினைத்தபடி நடப்பதில்லை. திருமணத்தின் பின்னர் கூட, தங்களது இயல்புதான் சரியானது என, கங்கணம் கட்டியபடி, எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி, வாழ முயல்கின்றனர்.

இவர்களில் ஒருவர் கூட, விட்டுக்கொடுத்தால், எந்தவித பிரச்சினைகளும் எழாமல் அன்புடன் வாழமுடியும். ஆனால், ஒருசிலர் தங்கள் விடாப்பிடியான செய்கைகளால், அவரோ அவரது மனைவியோ விட்டுக்கொடுப்பதை கௌரவக் குறைச்சல் என எண்ணி, 'நான் ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும்' என்ற தன்முனைப்புடன் இருந்தால், குடும்பம் களேபரமாகி விடும்.

திருமணப் பந்தம் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கும் பரம்பரையை உருவாக்கும் திவ்விய இணைப்பு. இதைச் சாதாரணமானதாக எண்ணிப் பிரிந்து போனால் நிம்மதியை இழப்பது மட்டுமல்ல, தவறு செய்பவர் எவரோ அவர், சமூகத்தில் நம்பிக்கையற்றவர் ஆகின்றார்.

திருமணம் நடைபெற முன்னர், ஆழ்ந்து யோசனை செய்ய வேண்டும். அன்பு மேலோங்கினால், பிரிவு இல்லை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# 13ஐ காட்டினால் தமிழர்கள் வாக்களிப்பார்களா?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதா அல்லது தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா என்று தமிழ் அரசியல் கட்சிகள் விவாதித்துக் கொண்டு இருக்கும் நிலையில் வட பகுதி தமிழ் வாக்குகளைப் பற்றிய தென் பகுதி அரசியல்வாதிகளின் அக்கறை அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த வருடத்தில் மூன்று முறை வட மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். அவர் ஜனாதிபதி என்ற முறையில் அந்த விஜயங்களை மேற்கொண்ட போதிலும், அவ்விஜயங்களின் போது காணி விடுவிப்பு போன்ற மக்களைக் கவரும் வகையிலான நடவடிக்கைகளிலேயே அவர் கலந்து கொண்டார். எனவே, தேர்தலை நோக்கமாகக் கொண்டே அவர் வட மாகாணத்துக்குச் சென்றுள்ளார் என்றே ஊகிக்க வேண்டியுள்ளது.

எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச கடந்த வாரம் தமது வட மாகாண விஜயத்தை மேற்கொண்டார். தென் பகுதியில் போலவே அங்கும் அவர் சில பாடசாலைகளுக்குக் கணினிகளை வழங்கிவிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் அரசியல் உரைகளை நிகழ்த்தி விட்டுத் திரும்பினார்.

மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் தலைமையிலான கூட்டணியான தேசிய மக்கள் சக்தியினதும் தலைவரான அனுர குமார திஸாநாயக்க கடந்த நான்கு மாதங்களில் இரண்டு முறை வட மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். அவரது முதல் பயணம் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்றதோடு இரண்டாவது பயணம் கடந்த வாரம் இடம்பெற்றது.

இவற்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் விஜயமே தென் பகுதியில் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இரண்டு சம்பவங்களே அதற்குக் காரணமாகும். அவ்விரண்டு சம்பவங்களும் அவருக்கு சாதகமாக அமையவில்லை.

முதலாவதாக அவர் தமது விஜயத்தின் போது அங்கு சிலருடன் கலந்துரையடிக்கொண்டு இருக்கும் போது வட மாகாணத்தில் கிறிக்கெட் விளையாட்டின் நிலைமையைப் பற்றி அவர்களிடம் விசாரித்தார். அவரது கேள்விகள் வட மாகாணத்தின் நிலைமையைப் பற்றியும் கிறிக்கெட் விளையாட்டைப் பற்றியும் அவருக்கு அவ்வளவு அறிவில்லை என்பதைப் போல் அமைந்தன.

அந்த வீடியோ இப்போது வைரலாகியுள்ளது. இரண்டாவதாக அவர் வட மாகாணத்தில் கலந்துகோண்ட பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் போது தாம் பதவிக்கு வந்தால் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தைப் பூரணமாக அமுல் செய்வதாகக் கூறினார். அது தென்பகுதிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதற்கு தென்பகுதியில் சிலர் தமது எதிர்ப்பையும் தெரிவித்துள்ளனர்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தமானது அரசியலமைப்பின் ஒரு பகுதியாக ஏற்கெனவே இருக்கிறது. அதில், பொலிஸ் மற்றும் காணி ஆகிய விடயங்களுக்கான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்குப் பரவலாக்கப்பட்டு இருக்கின்றன.

ஆயினும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறைகளை அத்திருத்தம் 1987ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது முதல் பதவிக்கு வந்த எந்தவொரு ஜனாதிபதியும் உருவாக்கவில்லை. 13ஆவது திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவது என்பது நடைமுறையில் அந்த பொறிமுறைகளை உருவாக்குவதேயாகும்.

அதேவேளை, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை முறையாக மாகாண சபைகளிடம் கையளிப்பதானது வடக்கிலும் தெற்கிலும் மக்களின் உணர்ச்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விடயமாகும். அதேபோல் அது தற்போது ஒரு சிக்கலான விடயமாகவும் மாறியுள்ளது. நீண்ட காலமாக அது விவாதிக்கப்பட்டு வருவதால் அவற்றின் உணர்ச்சிகர தன்மையும் சிக்கலார்ந்த தன்மையும் அதிகரித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அண்மைக் காலத்தில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவது தொடர்பாகப் பலமுறை கருத்து வெளியிட்டு இருந்தார். ஆனால், ஆரம்பத்தில் தெற்கே பௌத்த பிக்குகள் உள்ளிட்ட சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும் பின்னர் அந்த எதிர்ப்பு மங்கிச் சென்றது. அவர் அத்திருத்தத்தைப் பற்றி இன்று ஒன்றும் நாளை மற்றொன்றுமாக அடிக்கடி பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்ததால் இப்போது அவர் அதைப் பற்றி எதைக் கூறினாலும் எவரும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை.

சஜித் பிரேமதாச இனப் பிரச்சினையைப் பற்றி மிக அரிதாகவே பேசுகிறார். சிக்கலில் மாட்டிக்கொள்ளத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் அவர் அவ்வாறு செய்கிறார் போலும்.

இம்முறையும் அவர் 13ஆவது திருத்தத்தைப் பற்றி எந்த அர்த்தத்தில் கருத்து வெளியிட்டார் என்பது தெளிவில்லை.

எனினும், யாழ்ப்பாணத்தில் அவர் வெளியிட்ட கருத்தால் தென் பகுதியில் தாம் பெரும் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சில தலைவர்கள் அஞ்சுகிறார்கள் போலும். சஜித் வட மாகாணத்தில் இருக்கும் போதே கொழும்பிலிருந்து கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தமது தலைவர் மாகாண சபை முறையைப் பூரணமாக அமுலாக்குவதாகவே கூறினார் என்று தெரிவித்திருந்தார்.

அக்கட்சியின் மற்றொரு தலைவரான எஸ்.எம்.மரிக்கார் கருத்து தெரிவிக்கையில், மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதாக சஜித் கூறவில்லை என்று கூறியிருந்தார். ஆயினும் அதற்குப் பதிலளிப்பதைப் போல் ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றொரு தலைவரான எரான் விக்ரமரத்ன 13ஆவது அரசியலமைப்பைப் பூரணமாக அமுக்குவதென்றால் அதில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதும் அடங்கும் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே சஜித் தமது வட மாகாண விஜயத்தின் போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பற்றிப் பேசிய போதிலும் தமிழ் தலைவர்கள் அவரது கருத்தையிட்டு மகிழ்ச்சியடைந்ததாகவோ அதனை வரவேற்றதாகவே தெரியவில்லை.

மாகாண சபைகளின் தற்போது சர்ச்சைக்குரியதாக இருக்கும் அதிகாரங்களைப் பற்றிக் குறிப்பிடாமல் நழுவல் பாங்கிலேயே சஜித் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பற்றி வட மாகாணத்தில் கருத்து தெரிவித்ததுள்ளார் என்று கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவாநந்தா கூறியிருந்தார். அதேவேளை, அதிகார பரவலாக்கலைப் பற்றித் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சஜித்திடம் எடுத்துரைத்துள்ளார்.

சுமந்திரனுக்கு சஜித்தைப் பற்றி நன்றாகத் தெரியும். இருவரும் பாராளுமன்றத்தில் அடிக்கடி சந்தித்துக்கொள்பவர்களாவர். எனவே அதிகார பரவலாக்கலைப் பற்றிய சஜித்தின் நிலைப்பாட்டை சுமந்திரனுக்குத் தெரியும். எனவே, தான் அவர் சஜித் அதிகார பரவலாக்கலைப் பற்றி தமது தெளிவான நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் மரிக்கார் ஆகிய ஐமச நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களைச் சுட்டிக் காட்டியிருக்கும் வுயஅடை Guardian இணையத்தளம் 13ஆவது திருத்தம் விடயத்தில் சஜித் தெரிவித்த கருத்திலிருந்து அவரது கட்சி பின்வாங்குகிறது என்று குறிப்பிட்டு இருந்தது.

எனவே சஜித் தமிழ் மக்கள் மத்தியில் நல்லபிப்பிராயத்தையும் பெறாது தென்பகுதியிலிருந்தும் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டுள்ளார். எனவே, இந்த விஜயத்தின் மூலம் அவர் புதிதாக எதனையும் அடையவில்லை. ஏதோ பொதுவானதோர் காரணத்துக்காகத் தமிழ் மக்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க முடிவு செய்தாலேயோழிய இனப் பிரச்சினை விடயத்தில் சஜித்தின் நிலைப்பாட்டை அறிந்து அம்மக்கள் அக்கட்சிக்கு வாக்களிப்பார்கள் என்று கூற முடியாது.

இனப் பிரச்சினையானது அரசியல் கட்சிகளுக்குக் கையாள கடினமான விடயமொன்றாகும். அதில் கைவைத்தால் ஒன்றில் சிங்களத் தரப்பிலிருந்து அல்லது தமிழ் தரப்பிலிருந்து அதுவும் இல்லாவிட்டால் இரு தரப்பிலிருந்தும் விமர்சனங்களையும் சிலவேளை துரோகி பட்டத்தையும் பெற வேண்டியிருக்கும்.

இப்பிரச்சினை விடயத்தில் எந்தத் தரப்பினரின் எந்தக் கருத்து சரியாக இருந்தாலும் தமிழ் தலைவர்களினது வாதங்களும் சிங்களத் தலைவர்களின் வாதங்களும் நல்லிணக்கத்தை நோக்கியதாகவன்றி ஒருவரை ஒருவர் ஒதுக்கித்தள்ளக் கூடியனவாகவே அமைந்துள்ளன.

இந்த நிலையில், புரட்சிவாதிகளாகவோ அல்லது தேச பற்றாளர்களாகவோ தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்புவோர்களிடம் மட்டுமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு இருக்கிறது. ஆனால், அத்தீர்வுகளை எவராலும் நடைமுறைப்படுத்த முடியாது. குறிப்பாகத் தேர்தல் காலத்தில் இனப் பிரச்சினை விடயத்தில் வடக்கிலும் தெற்கிலும் வாழும் மக்களைத் திருப்திப்படுத்த எந்தவொரு அரசியல் கட்சியாலும் முடியாது. கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு ஒரு போதும் அது முடியாத காரியமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியாலும் முடியாது. ஏனெனில், அது புதிய கட்சியாகத் தென்பட்டாலும் அக்கட்சியானது 2020ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பிரிந்த ஒரு பிரிவாகும். அப்பிளவின் போது ரணிலோடு ஐ.தே.கவின் மிகச் சிலரே சேர்ந்து கொண்டனர்.

ஏறத்தாழ முழு ஐ.தே.கவும் ஐக்கிய மக்கள் சக்தியாகப் பிரிந்து சென்றது. அவ்வகையில் ஐ.ம.சவே உண்மையான ஐ.தே.கவாகும். எனவே ஐ.தே.கவின் கடந்த கால நடவடிக்கைகளுக்கு சஜித் உள்ளிட்ட ஐ.ம.சவும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

1977, 1981 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடுக்க தவறியதன் மூலமும் 1970களிலும் 80களிலும் இந்திய எதிர்ப்பு வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றியதன் மூலமும் ஐ.தே.கவே இனப் பிரச்சினையைப் பூதாகாரமாக்கியது. அன்றிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைப் போலவே அக்கட்சியும் இனப் பிரச்சினையை அரசியலாக்கியது. 2000ஆம் ஆண்டு முதல் சஜித்தும் அதனையே செய்தார். இன்றும் அதனையே செய்கிறார்.

## கடிதங்கள்

### மக்கள் அசௌகரியம்

மஸ்கெலியா நகரில் உள்ள ஆலய வீதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவாதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதியூடாக பாடசாலை மாணவர்கள், பயணிகள், சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். அத்துடன், வாகனங்கள் செல்வதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பாதையை நிர்மாணித்து தருமாறு பல தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வாகனங்கள் செல்லும் போது கழிவுநீர் பயனிகள் சீரி விசுவதால் அசௌகரியத்தை எதிர் நோக்கும் நிலையில் உள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# கல்லடி திருச்செந்தூர் ஆலய கும்பாபிஷேகம்

## இந்தியா–இலங்கை புனித தீர்த்த ஊர்வலம்

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு–கல்லடி, திருச்செந்தூர் முருகன் ஆலய கும்பாபிஷேகத்துக்கான புனித தீர்த்த ஊர்வலம், திங்கட்கிழமை (18) மாலை நடைபெற்றது.

இந்தியா இலங்கையில் உள்ள 21 கங்கைகளின் புனித தீர்த்தம், மட்டு. கல்லடி மாரியமன் ஆலயத்தில் இருந்து திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதின குருமா சந்நிதான கயிலைப்புனிதர் முதுமுனைவர் சீர்வாளர் சீர் சாந்தலிங்க மருதாச்சல அடிகள் தலைமையில் 20 சுவாமிகள் திருச்செந்தூர் ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

கும்பாபிஷேகம் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது.














### மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கையில்

# “யாருக்கும் கண் தெரியாது”

நெல்லிக்குளம் மலையை உடைப்பதற்கு எதிராக குரல்




**ஹஸ்பர் ஏ ஹலீம்**

திருகோணமலை-மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு, பாறை உடைப்பு இயந்திரத்துடன் உடைப்பு வேலைகளை சனிக்கிழமை (08) ஆரம்பிக்க முயன்றபோது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால், உடைப்பு இயந்திரம் அப்பகுதியில் இருந்து இன்னும் அகற்றப்படவில்லை.

இந்த விவகாரம் சம்பந்தமாக சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பொலிஸில் முறைப்பாடு செய்ததாகத் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக எமது வாழ்வாதாரத்தினை அழித்தொழிக்கும் நடவடிக்கையினை உடன் நிறுத்த வேண்டும். வாழ்வாதாரத்தினை பாதிக்கும் வகையில் மலைகளை உடைப்பதற்கு அனுமதி வழங்கியது யார் என்ற கேள்வியை எழுப்பினர்.

சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

நாளாந்தம். கூலித் தொழிலையும், நெற்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளை நம்பி வாழ்ந்து வரும் மக்கள்தான் இப் பகுதியில் இருக்கின்றனர்.

குளம், வயல், காடு போன்ற வளங்களையே நம்பி வாழ்கின்றனர் மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை இயற்கைக் காட்டு வளம் என்பன கல்லுடைப்பால் அழிவுறும் அபாயம் ஏற்படும் என்றார்.

இந்தமலையில் இந்து வழிபாட்டு அடையாளங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வளங்களை அழிக்கும் நிலைதான் மக்களையும் மீறி ஏற்படுகிறது. வடக்கு, கிழக்கில் தொல்பொருள் என்ற போர்வையில் தனியார் காணி அபகரிப்பு போன்றன வடக்கு, கிழக்கில் மாத்திரம் ஏன் இடம் பெறுகின்றது. வெடி பொருட்களைக் கொண்டே மலையை தகர்த்தி அதில் உள்ள கற் பாறைகளை எடுக்க முயற்சிக்கின்றனர். சட்ட ரீதியான அனுமதி என்றாலும் அரச திணைக்களங்களின் ஒட்டு மொத்த அனுமதி உடனே எந்த விதமான செயற்பாடுகளையும் மேற் கொள்ள முடியும். இப் பகுதியில் மக்களின் வாழ்வாதாரமாக விவசாய செய்கை குளங்களை நம்பி செய்கை பண்ணப்படுகிறது. கால் நடைகள் வளர்ப்பு இடம் பெறுகின்றது. இவ்வாறான நிலையில் இந்த மலைகளை உடைப்பதனால் பல சூழலியல் தாக்கங்கள் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

புவிச்சரிதவியல் சுரங்கப்பணியகம், வனஜீவராசிகள் திணைக்களம், சுற்றாடல் அதிகார சபை,தொல்பொருள் திணைக்களம் ,பிரதேச செயலகம்,காணி திணைக்களம்,விவசாய சம்மேளனம் உட்பட பல திணைக்களங்களின் அறிக்கைகள் சாதகமாகப் பெறப்பட்டதன் பின்புதான் அனுமதிகளை முறையாகப் பெறலாம் ஆனால் அரசியல் அதிகாரம் படைத்த கொந்தராத்துக்காரர்கள் மக்களின் கருத்துக்களைச் செவிசாய்க்காது இது போன்ற விடயங்களில் ஈடுபடுவது கவலையளிக்கிறது.

எது எவ்வாறாக இருந்த போதிலும் அப் பகுதி அப்பாவி மக்கள் சம்பூர் பொலிஸாரால் பத்து நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். செவ்வாய்க்கிழமை (11) பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

விடுவிக்கப்பட்ட 10 பேரும் மூதூர் நீதிமன்ற நீதிமன்றில் புதன்கிழமை (12.06.2024) மதியம் 12.20 மணிக்கு ஆஜராகினர். நீதிமன்றமானது இவர்கள் அனைவரையும் சொந்தப் பிணையில் விடுவித்ததோடு குறித்த பிரதேசத்தை இம்மாதம் 15 ம் திகதியன்று நீதிவான் பார்வையிடுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது. 10 பேரின் சார்பில் பு. முகுந்தன், ந. மோகன் ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

இதில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை தலைவர் சண்முகம் குகதாசன் குறித்த பிரதேசத்துக்கு விஜயம் செய்து மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

“பல வருட காலமாக இங்குக் குடியிருந்து வருகிறோம் இங்குப் பயிர்ச் செய்கை மூலமே வாழ்வாதாரத்தைக் கொண்டு சீவிக்கிறோம். அதற்குள் இம்மலையை உடைத்தால் நாங்களும் அழிந்து விடுவோம். மலை உடைப்பு தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற போதும் முறைப்பாட்டை ஏற்காமல் உரிய இடத்துக்கு வந்து அவர்களை வேலைகளைச் செய்ய விட்டு, எங்களைக் கைது செய்தார்கள். எனவே, வாழ்வாதாரத்தை அழித்து நாசமாக்கி மலையை உடைக்க வேண்டாம்” என அப் பகுதி குடும்பத் தலைவி ஒருவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

மக்கள் உரிமைகளைச் செவிமடுக்காது பொலிஸாரும் அடாவடியில் ஈடுபட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்து அப்பாவி மக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதும் உரிமைகளை மீறும் செயலாகும். இவ்வாறாகச் சிறுபான்மை மக்கள் மீது அதிகாரத்தை வைத்து அவர்களை அடக்கி ஒடுக்க நினைப்பதும் அதிகார துஷ்பிரயோகமாகக் கருதப்படுகிறது. அன்றாட ஜீவனோபாயத்தை கூட தங்களால் மேற்கொள்ள முடியாமல், இம்மக்கள் வருந்துகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்கள்,குழந்தைகளை வைத்து பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரத்தை ஏன்? அழிக்க நினைக்கிறார்கள்.


“மாறி காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் இந்த குளத்தை நம்பியே விவசாயத்தில் ஈடுபடுகிறோம் சுமார் 25க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கிறோம் “ என அப் பகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க திணைக்களங்களின் துறைசார் உத்தியோகத்தர்களின் மூலமான அனுமதிகள் ஊடாக அனுமதிகள் வழங்கப்பட வேண்டும். மலை உடைப்புக்குப் பயன்படுத்தும் வெடிபொருட்கள் மூலமாகவும் ஒலி மாசடைவு உட்பட பல பாதக விளைவுகள் ஏற்படக்கூடும். இதனால், அப் பகுதி மக்களே பாதிக்கப்படுவார்கள். மக்களுடைய விவசாய செய்கை கால் நடை வளர்ப்பு சுத்தமான நீரைப் பெற முடியாது. குளங்கள் பாதிப்பு என பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

“காய்ந்த விறகுகளைக் கூட எடுக்க முடியாது வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தடுத்து நிறுத்துவர். ஆனால் இவர்களுக்கு மலையை உடைக்க அனுமதி கொடுப்பார்கள் பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம். அரசாங்கம் தான் மக்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்காக அரசாங்கம் உதவ வேண்டும் “ என குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

மக்களுக்கு ஒரு சட்டம் மலையை உடைப்பவர்களுக்கு ஒரு சட்டமா சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற வார்த்தைக்கே அர்த்தமற்றதாகிவிடுகிறது.

“இந்த மலையால் 200வருடங்கள் பழமை வாய்ந்த கோயில் ஒன்று உள்ளது வணக்கஸ்தளங்களை சேர்த்து உடைக்க முற்படுகிறார்கள் வாழ்வாதாரத்தை நம்பி செயற்படும் எங்களை வன்முறையைத் தூண்டியதாகப் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கைது செய்தார்கள்” பல்வேறு இக்கட்டான சூழ் நிலையில் வாழும் மக்களை அச்சுறுத்திச் செயற்படுவதும் வாழ்வாதாரத்தை அழிப்பதும் மக்கள் மீது திணிக்கும் துஷ்பிரயோகமாக உள்ளது. அப்பாவி மக்களுக்கான வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுப்பதும் அவர்களைப் பொருளாதார ரீதியான முன்னேற்றங்களை கொண்டு சேர்ப்பதும் அரசாங்கம் மீதுள்ள கடமையாகும்.



ஜப்பான்

## ஜப்பானில் அரிய வகை பக்டீரியாவால்
# 1,000 பேர் பாதிப்பு

மனிதர்களின் தசையை தின்று 48 மணி நேரத்தில் ஆளையே கொள்ளும் புதிய வகை பக்டீரியா ஜப்பானில் பரவி வருவதாக கூறப்படுகின்றது.

ஸ்டெப்டோ கார்க்கில் டாக்ஸிக் சோக்ஸ் என்று அழைக்கப்படும் இந்த புதிய நோய் மனிதர்களை தாக்குவதுடன், அவர்களின் தசைகளை உட்கொள்ளத் தொடங்கி பாதிக்கப்பட்ட நபர்களின் உயிரை பறித்துவிடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், காய்ச்சல், கடும் உடல் சோர்வு, மூட்டுவலி, தொண்டைவலி, மூச்சு திணறல், வீக்கம் போன்றவை இவற்றின் ஆரம்பக்கட்ட அறிகுறிகள் என்றும் பின்னர் திசு மற்றும் உறுப்பு செயலிழப்பு ஏற்பட்டு மரணம் நிகழும் என்றும் டோக்கியோ மருத்துவ பல்கலைக்கழகம் தெரிவித்துள்ள நிலையில், இந்த பக்டீரியா தாக்கி 48 மணி நேரத்தில் பாதிக்கப்பட்ட நோயாளி உயிரிழப்பர் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைவரப்படி ஜப்பானில் 1,000 பேர் இந்த அரியவகை பக்டீரியாவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டு இறுதிக்குள் இது 2,500ஆக உயர வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஜப்பானில் கொரோனா காலத்தில் நடைமுறையில் இருந்த கட்டுப்பாடுகள் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. கொரோனாவை போன்று இது மிக வேகமாக பரவாது என்றாலும் இந்த புதிய பக்டீரியா உலக நாடுகளிடையே பீதியை கிளப்பியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா தொற்று உலகை அச்சுறுத்திய நிலையில், தற்போது இந்த ஜப்பான் பக்டீரியா பொதுமக்களிடையே பெறும் பீதியை கிளப்பியுள்ளது.

ஜெருசலேம்

## போர் அமைச்சரவையை கலைத்த
# இஸ்ரேல் பிரதமர்



காசா மீதான போர் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க, அமைக்கப்பட்டிருந்த மத்திய அமைச்சரவையை கலைப்பதாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறித்துள்ளார்.

பலஸ்தீனத்தை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேலில் கடந்த ஆண்டு தாக்குதல் நடத்தியது.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் ஹமாஸ்க்கு எதிராக போர் பிரகடனம் செய்து காசா மீது தாக்குதல் நடத்தியது. போர் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்க, அனைத்து கட்சிகள் அடங்கிய ஆறு பேர் கொண்ட மத்திய அமைச்சரவை அமைக்கப்பட்டது.

இந்நிலையில், மத்திய அமைச்சரவையை கலைப்பதாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறித்துள்ளார். முன்னாள் ஜெனரல் பென்னி கான்ட்ஸ் வெளியேறிய நிலையில் நெதன்யாகு இந்த முடிவை எடுத்துள்ளார்.

வடகொரியா

## 24 வருடங்களுக்கு பின்னர்
# வடகொரியாவுக்கு சென்றார் புட்டின்

24 வருடங்களிற்கு பின்னர் வடகொரியாவிற்கு விஜயத்தை மேற்கொண்ட புட்டின், அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜொங் அன்னை சந்திக்கவுள்ளார்.

அதேவேளை, உக்ரைனிற்கு எதிரான ரஷ்யாவின் யுத்தத்திற்கு உறுதியான ஆதரவு வழங்குவதற்காக வடகொரியாவிற்கு புட்டின் நன்றி தெரிவித்துள்ள நிலையில், வடகொரிய அரச ஊடகத்தில் வெளியாகியுள்ள கடிதத்தில் புட்டின் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் இராணுவ அச்சுறுத்தல்கள் போன்றவற்றிற்கு மத்தியில் தனது நலனை பாதுகாப்பதற்காக வடகொரியா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு புட்டின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அதேநேரம், நீதிக்கான பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் பன்முனைப்படுத்தப்பட்ட உலக ஒழுங்கை ஸ்தாபிப்பதை தடுக்கும் மேற்கத்தைய இலட்சியங்களை ரஸ்யாவும் புட்டின் உறுதியாக எதிர்க்கும் என ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பீகார்

# 100 பெண்களை அடைத்து வைத்து வன்புணர்வு
## 9 பேர் மீது வழக்குப் பதிவு



பீகாரில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 100க்கும் மேற்பட்ட இளம்பெண்களை அடைத்து வைத்து பாலியல் வன்புணர்வு செய்த 9 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பீகாரில் முசாபர்பூர் பகுதியில் ரூ.50,000 ஊதியத்தில் வேலை வாங்கி தருவதாகக் கூறி 100-க்கும் மேற்பட்ட இளம்பெண்களை அடைத்து வைத்து சித்திரவதை செய்து, பெல்டால் அடித்து பாலியல் வன்புணர்வு செய்துள்ளனர்.

குற்றவாளிகளின் பிடியில் இருந்து தப்பித்த பாதிக்கப்பட்ட பெண் இந்த கொடூர சம்பவம் குறித்து தகவல் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் குறித்து சமூக ஊடகங்களில் வெளியான தகவலின் மூலம் ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதாகவும், விண்ணப்பித்துத் தேர்வானதும், பயிற்சி என்ற பெயரில் ரூ.20 ஆயிரம் கேட்கப்பட்டதாகவும், பணத்தை வைப்பு செய்த பிறகு, அவர் பல சிறுமிகளுடன் அஹியாபூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்க வைக்கப்பட்டார் எனவும் குறித்த பெண் தெரிவித்துள்ளார்.




சென்னை

## 25 கி.மீ வரை இளைஞரின் உடலை
# இழுத்து வந்த ரயிலால் பரபரப்பு

சென்னை எம்.ஜி.ஆர் சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து ஆலப்புழா வரை செல்லும் ஆலப்புழா எக்ஸ்பிரஸ் கடந்த 17ஆம் திகதி நள்ளிரவு சுமார் 11.45 மணிக்கு காட்பாடி ரயில் நிலையத்திற்கு வந்தது.

அப்பொழுது ரயில் என்ஜின் முன்பக்கத்தில் கால்கள் துண்டான நிலையில், இளைஞர் ஒருவரின் சடலத்தை கண்டு பயணிகள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ரயில்வே பொலிஸார், ரயில் என்ஜினில் சிக்கி இருந்த இளைஞரின் சடலத்தை மீட்டனர்.

அப்பொழுது இளைஞர் சடலத்தில் இரண்டு கால்களும் துண்டாகி இருந்த நிலையில், ரயிலில் சிக்கி இழுத்து வந்ததால் சடலம் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் தலையில் பலத்த காயமும் ஏற்பட்டிருந்தது.

இறந்த இளைஞரின் சடலம் யாருடையது என்பது இதுவரை தெரியவராத நிலையில், பொலிஸார் சடலத்தை மீட்டு, அடுக்கம்பாறை அரசு வைத்தியசாலைக்கு உடற் கூராய்வுக்காக அனுப்பி வைத்தனர்.

சுமார் 25 கிலோ மீட்டர் குறித்த இளைஞரின் சடலத்தை இழுத்து வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்ததையடுத்து, இறந்த இளைஞர் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:
# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், சென். லூசியாவில் செவ்வாய்க்கிழமை (18) ஆப்கானிஸ்தானுடனான குழு சி போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ரஷீட் கான், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், நிக்கலஸ் பூரானின் 98 (53), ஜோன்சன் சார்ள்ஸின் 43 (27), அணித்தலைவர் றொவ்மன் பவலின் 26 (15), ஷே ஹோப்பின் 25 (17) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், குல்படின் நைப் 2-0-14-2, நூர் அஹ்மட் 4-0-20-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 219 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், அகீல் ஹொஸைன் (2), குடகேஷ் மோட்டி (2), ஒபெட் மக்கோய் (3), அல்ஸாரி ஜோசப், அன்ட்ரே ரஸலிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 16.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களையே பெற்று 104 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் இப்ராஹிம் ஸட்ரான் 38 (28) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக பூரான் தெரிவானார்.

இந்நிலையில், அன்டிகுவாவில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு இரண்டு சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை தென்னாபிரிக்கா எதிர்கொள்ளவுள்ளதுடன், சென். லூசியாவில் வியாழக்கிழமை (20) காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இன்னொரு குழு இரண்டு சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் நடப்புச் சம்பியன்களான இங்கிலாந்தை மேற்கிந்தியத் தீவுகள் எதிர்கொள்ளவுள்ளது.



## இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்: பெர்கியூசனின் 4-4-0-3 உடன்
# பப்புவா நியூ கினியை சுருட்டிய நியூசிலாந்து

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், இந்நிலையில், ட்ரினிடாட்டில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற பப்புவா நியூகினியுடனான குழு சி போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

பப்புவா நியூ கினி: 78/10 (19.4 ஓவ.) (பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன்- [4], டிம் சௌதி 2/11 [4], ட்ரெண்ட் போல்ட் 2/14 [4], இஷ் சோதி 2/29 [3.4], மிற்செல் சான்ட்னெர் 1/17 [4])

நியூசிலாந்து: 79/3 (12.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே 35 (32) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: லொக்கி பெர்கியூசன்

இப்போட்டியில் நான்கு ஓவர்கள் பந்துவீசியிருந்த நியூசிலாந்தின் லொக்கி பெர்கியூசன் நான்கு ஓவர்களிலும் எதுவித ஓட்டங்களையும் கொடுக்காமல் மெய்டன் ஓவர்களாக வீசி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்த நிலையில், இருபதுக்கு-20 உலகக் கிண்ணப் போட்டியொன்றில் அதிக மெய்டன் ஓவர்களை வீசியவராக தனது பெயரைப் பதிந்து கொண்டார். முன்னதாக அவுஸ்திரேலியாவின் ஷோன் டைட், இலங்கையின் அஜந்த மெண்டிஸ், நுவான் குலசேகர, ரங்கன ஹேரத், இங்கிலாந்தின் கிரேமி ஸ்வான், இந்தியாவின் ஹர்பஜன் சிங், புவ்னேஷ்வர் குமார், உகண்டாவின் பிராங்க் சுபுகா, பங்களாதேஷின் தன்ஸிம் ஹஸன் சகிப் ஆகியோர் தலா இரண்டு மெய்டன்களை வீசியதே சாதனையாக இருந்தது.


## இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில்
# எதிர்காலம் குறித்து சந்தேகத்தில் வில்லியம்சன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரானது 2026ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறும்போது அதில் பங்கேற்பதை நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்சன் உறுதிப்படுத்தவில்லை.

நடப்பு இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து குழுநிலைப் போட்டிகளுடன் நியூசிலாந்து வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், 34 வயதாகும் வில்லியம்சனின் சக வீரரான ட்ரெண்ட் போல்ட் இதுவே தனது இறுதி இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரென ஏற்கெனவே உறுதிப்படுத்திய நிலையிலேயே எதிர்காலத்தில் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்பதை வில்லியம்சன் உறுதிப் படுத்த வில்லை.




# யூரோ: ஸ்லோவாக்கியாவிடம் தோற்ற பெல்ஜியம்



ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரில், திங்கட்கிழமை (17) நடைபெற்ற ஸ்லோவாக்கியாவுடனான குழு ஈ போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் தோற்றது.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்ற ஒஸ்திரியாவுடனான குழு டி போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 19, ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.